*IN THE COURT OF THE  SUB JUDGE, MELUR*
*DEPOSITION OF WITNESS*
*OS 336/2022*

| | |
|---|---|
| *Name* | *: Rajasekar* |
| *Father's Name* | *:* |
| *Village* | *:* |
| *Taluk* | *:* |
| *Caste* | *:* |
| *Calling* | *:* |
| *Religion* | *:* |
| *Age* | *:* |

*Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 28.02.2024*

**வா.சா.1  முதல்  விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இவ்வழக்கின் வாதி. 03.05.2000ம் தேதிய மகாலிங்கத்தின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1. 18.08.2016ம் தேதிய மருதாயிம்மாளின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 19.06.2003ம் தேதிய மகாலிங்கத்தின் வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.3. தாவா சொத்துக்களின் பட்டா எண்கள் 308, 1475, 6013, 7463-ன் 4 எண்ணிக்கை கணினி சிட்டா வா.சா.ஆ.4. 27.06.2008ம் தேதிய 1ம் பிரதிவாதியின் தந்தை சுப்பிரமணியன் என்பவர் 6ம் பிரதிவாதி பாலன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில் மெண்ட் ஆவண எண்.3246/2008 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 22.11.2010ம் தேதிய 6ம் பிரதிவாதி பாலன் 3ம் பிரதிவாதி கண்ணன் என்பவருக்கு  என்பவருக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில் மெண்ட் ஆவண எண்.6554/2010 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. 13.10.2022ம் தேதி வாதிகள் 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் 6 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை 5 எண்ணிக்கை மற்றும் 5ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் உறை வா.சா.ஆ.7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்